## காணாமல் போன எங்கள் கலியமூர்த்தி!

மாதத்தின் முதலாம் ஞாயிற்றில்,
மருவின்றி கவிதை சொல்ல;
தீதின்றி இல்லம் தன்னில்,
தேர்ந்துமோர் கதையைச் சொல்லி,
நாதமாய் எண்ணம் கூட,
நடந்தோடி பேருந்து தன்னிலேறி,
காததூர மதையும் பயணித்து,
கடற்கரை தன்னை யடைந்து,

மூத்த பெருங்கவியாம் **பொன்னடி**யின்,
முகிழ்ந்த கருத்தியல் தம்முடன்,
காத்திருந்து கவிதை கேட்டு,
கடற்காற்றுடன் கவிதை சொல்லி,
கூத்து கலைந்தது போல்,
கூவியே நடந்து நாங்கள்,
காத்திருந்து மீண்டும் பேருந்தேறி,
கலைக்கும் தூக்கம் தொடர,

இன்முகம் தேடியே நாங்களும்,
இல்லத்தில் நுழைந்து உண்டபின்,
தன்னெனத் தமிழைக் காத்த
தகைவுடன் உறங்கச் செல்வோம்!
இன்றந்த நிலையோ வேறு,
இல்லத்தில் இருந்தே செய்வோம்!
என்னருமை **காரைக்கால் கலியமூர்த்தி,**
ஏன் இப்புலனத்தில் பதிவதில்லையோ!

- **கு.ப. அசோகன்**
- 06-03-2022 (06-35 பி.எம்)